# ஜோதிடம்
# வாழ்வா ? வழிகாட்டியா ?

ஜோதிடத்தைப்பற்றி பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன.

ஜோதிடம் உண்மை.

ஜோதிடம் பொய்.

ஜோதிடம் மூட நம்பிக்கை.

ஒரு வழக்கறிஞரிடம் வழக்கிற்காக ஒருவர் அவரிடம் ஒருவர் வரும்போது வழக்கில் ஜெயித்துக்காட்டுவதாக கூறுகிறார் அல்லது ஜெயிக்கவும் வாய்ப்பிருக்கிறது என்கிற மாதிரியும் பதிலளிக்கிறார். உண்மை என்ன ?

வழக்கு ஜெயிக்கவும் வாய்ப்பு உள்ளது; தோற்றுப்போகவும் வாய்ப்பு உள்ளது.

அதைப் போலவே மருத்துவர், உயிருக்கு உறுதியளிக்கும் நோயாளி இறந்து விடுவதும் உண்டு.

கீழே கொடுத்துள்ள ஜாதகத்தை கவனியுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| சுக்ரன் | சூரியன் புதன் | | கேது |
| | ராசி | | லக்னம் குரு சந்திரன் |
| செவ்வாய் | | | |
| ராகு | | சனி | |

முன் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள ஜாதகம் ஸ்ரீராமபிரானுடையது.

ஸ்ரீராமபிரானுக்கே நமது முன்னோர்கள் ஜாதகம் எழுதியிருக்கிறார்கள்.

ஸ்ரீராமபிரானுக்கே ஜாதகம் எழுதப்பட்டிருக்கிறது என்றால் எத்தனை நூறு ஆண்டுகளுக்கு முன்பே வானத்தில் மின்னிக்கொண்டிருக்கும் நட்சத்திரங்களையும், சுற்றி வரும் கிரகங்களையும் நமது முன்னோர்கள் கண்டுபிடித்து இருக்க வேண்டும். எத்தனை நூறு ஆண்டுகள் ஆராய்ச்சி மூலம், இந்த கிரகஙமகளும், குறிப்பிட்ட நட்சத்திரங்களும் மனித வாழ்வில் ஆதிக்கம் செய்கின்றன என்று அறிந்திருக்க வேம்டும்? வானியலை அறிய என்ன நவீன கருவிகள் அப்போது இருந்தன?

நம்மால் புரிந்துக் கொள்ள முடியவில்லை என்றாலும் அதனை நாம் தெரிந்து கொள்ள முற்படாமலேயே மூட நம்பிக்கை என்று சொல்வதுதான் மூட நம்பிக்கை.

உண்மையை அறிய முற்படாமலேயே உண்மையாக இல்லை என்று பிதற்றுவதே மடமை.

ஒரு டாக்டர் ஒரு நோயை செய்யாமல் அதை இன்னொரு டாக்டர் சரியாக செய்துவிட்டால் முதலில் சந்தித்த டாக்டரை இவன் என்னத்த டாக்டருக்கு படித்தான் என்று அவர் படித்த படிப்பை குறை கூறுகின்றோமே தவிர மருத்துவமே பொய் என்கிறோமா?

வக்கீல் ஒரு வழக்கில் தோற்றுவிட்டால்......தோற்றுக்கொண்டே இருந்தால் இவன் என்ன சட்டம் படித்தான் என்று சொல்கிறோம். சரியாக பண்ணவில்லை என்றுதான் பொருள். கணக்கு ஆசிரியரிடம் தவறு இருக்குமே தவிர கணக்குப்பாடத்தின் தவறாகாது.

அப்படித்தான் ஜோதிடமும்.

ஜோதிடம் பொய் அல்ல; மூடநம்பிக்கையும் அல்ல.

ஜோதிட அறிவியல் ஆராய்ச்சி அரைகுறையாகவே இருப்பதாலும், சில டாக்டர்களைப்போல சில வக்கீல்களைப்போல, தன்னை நாடி வருபவர்களிடம் சில ஜோதிடர்கள் பணம் பறிப்பதிலேயே குறிப்பாக இருப்பதாலேயே ஜோதிட கணிப்பு பொய்யாகிறது.

ஜோதிட கணிப்புகளுக்காக தேவைப்படும் விவரங்களில் தவறு இருப்பினும் அல்லது போதுமான விவரங்கள் தரப்படாவிடினும் ஜோதிடத்தில் தவறு ஏற்படும்.

காலத்திற்கு ஏற்ற மாற்றங்கள் ஜோதிட கணிப்பு முறைகளிலும் பின்பற்ற வேண்டியது அவசியமாக இருக்கிறது. இதற்கான அறிவை மேலும்,மேலும் ஜோதிட ஆராய்ச்சியில் தொடர்ந்து ஈடுபடுவதன் மூலமாகவே பெறமுடியும்.

ஏட்டு சுரைக்காய் கறிக்கு உதவாது என்பது முற்றிலும் உண்மை. செயல்முறை அனுபவம், ஆராய்ச்சி திறன் ஆகியவை மேம்பட்டால் மட்டுமே சரியான கணிப்புக்களை தர முடியும்.

ஜோதிடம் நமக்கு வாழ்வா வழிகாட்டியா என்றால் ஜோதிடக்கலை நம் வாழ்விற்கு வழிகாட்ட பிறந்துள்ள ஒரு அற்புதக்கலை என்று சொல்ல முடியும்.

நமது வாழ்வை செழுமையாக, வெற்றிகரமானதாக நேர்மையானதாக குறிக்கோளுடையதாக மாற்றிக்கொள்ள ஜோதிடம் அற்புதமான வழிகாட்டி.

ஒரு சில அனுபவ உண்மை நிகழ்ச்சிகளை பார்க்கலாம்.

எனக்கு தெரிந்த ஒரு குடும்பம்.

அந்தக் குடும்பத்தில் இரண்டு ஆண் பிள்ளைகள், மூன்று பெண் பிள்ளைகள் மற்றும் பெற்றவர்களையும் சேர்த்து மொத்தம் ஏழு பேர்.

முதல் பையன் ஒரு வங்கியில் அதிகாரியாகப் பணியாற்றி வந்தார். திருமணம் நடந்திருக்கவில்லை.

பெண்ணின் திருமணம் சம்மந்தமாக ஜோதிட ஆலோசனைக்காக இக்குடும்பத்தினர் ஒரு முறை என்னிடம் வந்திருந்தனர். எனது கணிப்புப்படியே திருமணம் நடை பெற்றதால் ஜோதிட ஆலோசனைக்காக அவ்வப்போது வந்து செல்வார்கள். நாளடைவில் குடும்ப நண்பர்களாகிவிட்டனர்.

இவர்களின் குடும்ப ஜாதகங்களை கம்ப்யூட்டரில் ஆய்வு செய்து சில ஜோதிட ஆலோசனைகளை வழங்கினோம்.

1. வங்கியில் பணியாற்றிய அவர்களது மகனை வேறு இடத்திற்கு மாறுதல் பெற்று செல்ல அறிவுறுத்தப்பட்டது.

2. லாரி வாங்கும் எண்ணம் கொண்டிருந்த இரண்டாவது மகனுக்கு லாரி வாங்க வேண்டாம் என அறிவுரை வழங்கப்பட்டது.

மேற்குறிப்பிட்டுள்ள ஆலோசனைகளை மகன்கள் புறக்கணித்தனர். அதன் விளைவாக அந்தக்குடும்பம் வேறு ஊருக்கு இடம் பெயர்ந்து செல்லும் நிலை ஏற்பட்டுவிட்டது. நடந்த உண்மைகளை இங்கு விவரிக்கிறேன்.

லாரி வாங்கி சம்பாதிக்க வேண்டும் என்பது இரண்டாவது மகனின் தீராத தாகம். சில நண்பர்கள் இதனை ஊக்கப்படுத்தி ஒரு சிறு தொகையையும் கொடுக்க முன் வந்தனர். மீதப்பெரும் தொகைக்கு வட்டிக்கு வட்டி வசூலிக்கும் கும்பலிடம் பணம் பெற முடிவு செய்யப்பட்டது.

லாரி வாங்க எடுத்துள்ள முடிவை வீட்டில் தெரிவித்தபோது வீட்டிலுள்ளவர்கள் - "வேண்டாம், கம்ப்யூட்டர் வசந்த் லாரி வாங்க வேண்டாம்" என கூறியிருக்கிறார் என எவ்வளவோ எடுத்துக்கூறியும் கேட்காமல் சில நண்பர்களின் தவறான ஊக்குவிப்பு காரணமாக பழைய லாரியை வாங்கினார்.

குடும்பத்திற்கு சோதனை ஆரம்பமாகியது.

லாரி செலவுக்கு மேல் செலவு வைத்தது. இதற்காக கடனுக்கு மேல் கடன் பெற நேரிட்டது. பின் விளைவுகளைப்பற்றிய கவலை சிறிதும் இல்லாமல் கடனை கற்கண்டாக வாங்கினார்.

வட்டியும் அசலுடன் பெருத்துக்கொண்டே போனது.

லாரியை நன்றாக ஓட வைக்க பரிகாரம் உண்டா என ஆதங்கத்துடன் வந்துக்கேட்டனர் பெற்றவர்கள்.

நாம் பரிகாரம் எதையும் பரிந்துரைப்பதில்லை. எனவே லாரியை இந்தத்தருணத்திலாவது விற்றுவிடுவதுதான் சிறந்தப் பரிகாரம் என்று சொல்லியனுப்பினேன்.

ஆனால் இந்த யோசனையும் மகனால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

கடன்காரர்கள் வீடு தேடி வர ஆரம்பித்தார்கள். ஒரு பக்கத்து கடன் அடைக்க இன்னொரு பக்கம் கடன் பெற்றார்கள்.

தம்பியின் கடனடைக்க குடும்பத்தில் உள்ளவர்களும் அங்கங்கே கடன் பெற்றார்கள்.

கடன் காரர்களின் தொல்லை தாங்க முடியாமல் குடும்பத்தில் உள்ள அனைவரின் மீதும் மிகுந்த பாசம் கொண்டிருந்த வங்கியில் பணியாற்றி வந்த அண்ணன் வங்கியில் கணக்கு வைத்திருந்த தனக்கு பழக்கமான பெரிய வாடிக்கையாளர்கள் சிலரது கணக்கிலிருந்து தந்திரமாக பணம் எடுக்கும் ஏமாற்று வித்தையைக் கையாண்டார்.

கடன்காரர்களின் அதிகமாக நெருக்கும் போதிலெல்லாம் மற்றவர்கள் கணக்கிலிருந்து பணம் எடுப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

வங்கிப்பணியில் சேர்ந்த நாள் முதல் நேர்மையாகப் பணியாற்றியவராதலால் வங்கி மேலாளருக்கு இவர் மீது நல்ல கருத்து இருந்தது. நம்பிக்கைக்கு உரியவர் என்பதால் சில பொறுப்புக்களை கூடுதலாகவும் அளித்திருந்தார். அந்த நம்பிக்கையை தனது தவறான செயலுக்காக பயன்படுத்திக்கொண்டார்.

பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான் என்பது போல இவரது கையாடல் ஒரு நாள் வெளிச்சத்துக்கு வந்துவிட்டது. இவரை டிஸ்மிஸ் செய்தது நிர்வாகம். லாரியும் போய், பதினைந்தாயிரம் சம்பளம் கொடுத்த வங்கி அதிகாரி வேலையும் போய்விட்டது. கடனுக்கு பதில் சொல்ல முடியாமல் ஊரைவிட்டு வேறு எங்கோ சென்று வாழ்கிறார்கள்.

நமது கம்ப்யூட்டர் ஜோதிட ஆராய்ச்சி அறிவுரைப்படி வேறு ஊருக்கு மாறுதல் வாங்கி சென்றிருந்தால் புதிய இடத்தில் பணம் கையாடல் செய்ய யோசித்திருப்பார். இது தவிர்க்கப்பட்டிருக்கும். வேலைக்கும் ஆபத்து வந்திருக்காது.

லாரி வாங்காமல் இருந்திருந்தால் இது மாதிரியான பிரச்சனைக்கு வாய்ப்பே இல்லை அல்லது லாரியை விற்கச்சொன்ன நேரத்தில் விற்றிருந்தால் கூட மிகப் பெரிய பிரச்சனையிலிருந்து மீண்டிருக்கலாம்.

நமது வாழ்வை செழுமையாக, வெற்றிகரமானதாக, நேர்மையானதாக, குறிக்கோளுடையதாக மாற்றிக்கொள்ள ஜோதிடம் ஒரு அற்புதமான வழிகாட்டி.

இன்னொரு உண்மை சம்பவம் பார்ப்போம்.

ஆங்கில மருந்துகளுக்கான மொத்த வியாபாரத்தை கூட்டுத் தொழிலாக செய்து வந்த ஒருவர் தனக்காக ஒரு தொழிலை சொந்தமாக ஆரம்பிக்க ஜோதிட ஆலோசனை கேட்டு வந்தார்.

அவரது ஜாதகத்தை கம்ப்யூட்டரில் ஆராய்ந்து சில்லரை வியாபார மருந்துக்கடை வைக்க அறிவுரை வழங்கப்பட்டது. அதன்படியே அவரும் சில்லரை வியாபார மருந்துக்கடை துவக்கினார். விற்பனையும் அமோகமானது. குறுகிய காலத்திலேயே நல்ல வளர்ச்சி பெற்றார்.

ஒரு காலக்கட்டத்திற்குப்பிறகு மீண்டும் அவர் மாந்தோப்பை கந்தாயத்துக்கு எடுக்க இருப்பதாகவும், ஜாதகப்படி அத்தொழில் ஒத்துவருமா என்று அறிந்துக்கொள்வதற்காகவும் நம்மை சந்தித்தார்.

புதியதாக ஆரம்பிக்க உத்தேசித்துள்ள தொழில் ஜாதகப்படி சாதகமாக இல்லை என்று கணித்து கூறப்பட்டது. சில நாட்கள் கழித்து மீண்டும் நம்மை சந்தித்தார். வெளியூரில் ஒரு ஜோதிடரை சந்தித்ததாகவும், அவர் இவரின் ஜாதகம் அமோகமாக இருப்பதாகவும், மாந்தோப்பை கந்தாயத்திற்கு எடுக்கலாம் என்று தெரிவித்துள்ளதாகவும் கூறினார்.

மீண்டும் அவரிடம் ஜாதகப்படி சாதகமாக இல்லை என்று கணித்து கூறப்பட்டது. ஆனால் அவர் மாந்தோப்பை கந்தாயத்திற்கு எடுப்பதில் உறுதியாக இருந்ததால் நாம் கீழ்கண்டவாறு ஆலோசனை வழங்கினோம்.

**இப்போதுள்ள மருந்துக்கடையின் வருமானத்தை எடுத்து மாந்தோப்பில் முதலீடு செய்ய வேண்டாம். ஏனென்றால் மாந்தோப்பை எடுத்து நாளை சாப்பாட்டிற்கே பிரச்சனை ஏற்பட்டு விடலாம். உங்களின் ஜாதகப்படி மருந்து சார்ந்த துறைக்கே நல்ல எதிர்காலம் உள்ளது. அதனால் இன்னோர் சில்லரை வியாபார மருந்துக்கடை துவக்கி அதிலிருந்து பெறும் லாபத்தை மட்டும் வேண்டுமானால் உங்கள் விருப்பப்படி மீண்டும் நன்கு யோசித்து முதலீடு செய்யுங்கள்** - என்று கூறினோம்.

ஆனால் அவர் மாந்தோப்பை கந்தாயத்திற்கு எடுத்துவிட்டார். முன்பின் தெரியாத, நன்கு அனுபவம் இல்லாத தொழிலில் இறங்கி, கடன்பட்டு, கடனுக்கு பயந்து, கடன் காரர்களின் தொல்லை தாங்க முடியாமல் கடையையும் மூடிவிட்டு எங்கோ மறைந்துக்கொண்டார். பின்னாளில் அவரது தந்தை கடனுக்கான பொறுப்பை ஏற்று தனது சேமிப்பிலிருந்தும், கடையை விற்றும் கடனையடைத்தார். கடன்அடைக்கப்பட்டதும் வெளியூரில் மாமியார் வீட்டில் அடைக்கலமாகியிருந்தவர் ஊருக்குள் வந்தார்.

இன்று இவர் ஒரு ஆங்கில மருந்துகளுக்கான மொத்த வியாபார நிறுவனத்தில் மிகக் குறைந்த சம்பளத்திற்கு வேலை பார்த்து வருகிறார்.

நமது வாழ்வை செழுமையாக, வெற்றிகரமானதாக, நேர்மையானதாக, குறிக்கோளுடையதாக மாற்றிக்கொள்ள ஜோதிடம் ஒரு அற்புதமான வழிகாட்டி.

அடுத்து இன்னுமோர் உதாரணம்.

கேரளாவிலிருந்து தமிழகத்திற்கு வந்து மெஸ் ஒற்றை நடத்தி வந்தது அந்த குடும்பம்.

குழந்தைகளின் படிப்புக்கும், பராமரிப்புக்கும் அயராமல் விடியற்காலை முதல் நள்ளிரவு முடிய அந்த கேரளத்தம்பதியினர் அடுப்பு சூட்டை பொருட்படுத்தாமல் சமைத்து உழைத்தனர்.

குழந்தைகள் பெற்றோர் படும் சிரமம் பார்த்து வளர்ந்ததனாலோ என்னவோ படிப்பில் சூட்டிகையாக இருந்தனர்.

பெரிய பெண் ப்ளஸ் டூ தேர்வில் பள்ளியிலேயே முதல் மாணவியாக வெற்றி பெற்றும் ஒரிரு மதிப்பெண் குறைவினால் மருத்துவக்கல்லூரியில் சேர இயலாத நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் இம்ப்ரூவ்மென்ட் எழுதினால் மருத்துவக்கல்லூரியில் சேர வாய்ப்பு இருக்குமா, பெண்ணின் ஜாதகத்தில் மருத்துவராகும் வாய்ப்பு இருக்கிறதா என கேட்டு நம்மை அணுகினார்கள்.

கம்ப்யூட்டரில் ஜாதகத்தை ஆய்வு செய்து பார்த்தபோது அப்பெண் மருத்துவராகும் வாய்ப்பு இருப்பது கண்டறியப்பட்டது.

ஜாதகப்படி மருத்துவராகும் வாய்ப்பு இல்லாமல் இருந்தால் ஒரு வருடத்தை வீணாக்காமல் வேறு ஒரு துறைக்கான படிப்பில் அப்பெண்ணை சேர்த்துவிட முடிவு செய்திருந்தார்கள்.

நமது கம்ப்யூட்டர் கணிப்பில் நம்பிக்கை வைத்து இம்ப்ரூவ்மென்ட் எழுத வைத்தனர்.

இன்று அந்தப் பெண் வெளிநாட்டில் டாக்டராக இருக்கிறார். திருமணமும் ஆகிவிட்டது.

ஜோதிடம் பொய் அல்ல; மூடநம்பிக்கையும் அல்ல.

ஜோதிட அறிவியல் ஆராய்ச்சி அரைகுறையாகவே இருப்பதாலும், சில டாக்டர்களைப்போல சில வக்கீல்களைப்போல, தன்னை நாடி வருபவர்களிடம் சில ஜோதிடர்கள் பணம் பறிப்பதிலேயே குறிப்பாக இருப்பதாலேயே ஜோதிட கணிப்பு பொய்யாகிறது.

ஜோதிட கணிப்புகளுக்காக தேவைப்படும் விவரங்களில் தவறு இருப்பினும் அல்லது போதுமான விவரங்கள் தரப்படாவிடினும் ஜோதிடத்தில் தவறு ஏற்படும்.

ஜோதிடம் நமக்கு வாழ்வா வழிகாட்டியா என்றால் ஜோதிடக்கலை நம் வாழ்விற்கு வழிகாட்ட பிறந்துள்ள ஒரு அற்புதக்கலை என்று சொல்ல முடியும்.

நமது வாழ்வை செழுமையாக, வெற்றிகரமானதாக, நேர்மையானதாக, குறிக்கோளுடையதாக மாற்றிக்கொள்ள ஜோதிடம் அற்புதமான வழிகாட்டி.

## உண்மையாக நடந்த கம்ப்யூட்டர் வசந்த் கம்ப்யூட்டர் ஆராய்ச்சி கணிப்புகள் பற்றி

### சில உதாரணங்கள்

1. கம்ப்யூட்டரில் கணிப்பவனெல்லாம் சிறந்த ஜோதிடனாக ஆகிவிட முடியாது என்று ஜோதிடத்தொழிலில் வெகு நாட்களாக ஈடுபட்டு வரும் ஒரு பெரியவர் அரசியல் கண்ணோட்டமுள்ள ஒரு பத்திரிக்கையில் 1990 ம் வருடம் எழுதியிருந்தார். ஆனால் நமது கணிப்புகள் அனைத்தும் கம்ப்யூட்டரில் கணிக்கப்பட்டவை. மத்தியில் வி.பி.சிங்கும், தமிழகத்தில் திரு.கருணாநிதி அவர்களும் ஆட்சி செய்து கொண்டிருந்த போது வி.பி.சிங் ஆட்சி ஆட்டம் கண்டு கொண்டிருந்தது.

பெரிய ஜோதிடர் ஒருவர் மத்தியில் வி.பி.சிங் ஆட்சி நிலைக்கும் என்றும் கருணாநிதியே தமிழகத்தின் முதல்வராக நீடிப்பார் என்றும் ஒரு பிரபல அரசியல் பத்திரிக்கையில் ( 1.11.1990 தேதி இதழில் ) எழுதியிருந்தார்.

ஆனால் இதை நாம் மறுத்து மத்தியில் சிறிது காலம் திரு.சந்திர சேகர் ஆட்சி புரிவார் என்றும் தமிழகத்தில் ஆகஸ்ட் 1991 க்குள் திரு.கருணாநிதி பதவி இழப்பார் என்றும் 2.11.1990 அன்று கம்ப்யூட்டரில் கணித்து 11.11.1990 தேதியில் அனுப்பி வைத்தோம். அது மட்டுமல்ல. ஜெயலலிதா அவர்கள் முதல்வராகும் காலக்கட்டத்தை நெருங்கிக்கொண்டிருக்கிறார் என்றும் **29.10.1991 க்குள் ஜெயலலிதா முதலமைச்சராவார்** என்றும் கம்ப்யூட்டரில் கணித்து அனுப்பினோம். ஜெயலலிதா அவர்களே அரசியலில் தனது நம்பிக்கை இழந்திருந்த நேரம் அது. நாம் எழுதிய 1991-93 ம் வருட சனிப்பெயர்ச்சி புத்தகத்திலும் 52 வது பக்கத்தில் ஜெயலலிதா அவர்கள் முதல்வராவது குறித்து கீழ்கண்டவாறு எழுதியிருந்தோம்.

**“.........செல்வி ஜெயலலிதா அவர்களின் பிறந்த ஜாதகத்தை கம்ப்யூட்டரில் ஆராய்ந்த போது அவர் முதல்வராகும் காலக்கட்டத்திற்குள் வந்துக் கொண்டிருக்கிறார் என்று தெரிகிறது............”**

திரு.கருணாநிதி அவர்களின் அரசு ஜனவரி 30ம் தேதி 1991ம் வருடம் டிஸ்மிஸ் செய்யப்பட்டது. அடுத்தப் பொதுத் தேர்தலில் அ.இ.அ.தி.மு.க வெற்றிப் பெற்றது. ஜுன் 24ம் தேதி 1991ம் வருடம் **செல்வி ஜெயலலிதா முதலமைச்சரானார்.** இந்தப் புத்தகம் கோயில்பட்டியில் விற்பனைக்கு வெளியான அதே நாள் நள்ளிரவில் திரு.கருணாநிதி அவர்களின் அரசு டிஸ்மிஸ் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. நமது கணிப்பு உண்மையாகப் போவது உறுதியானதால் 1991-93 சனிப்பெயர்ச்சி புத்தகத்தின் விற்பனை உரிமையைப் பெற்றிருந்த கோவில் பட்டியைச் சேர்ந்த விற்பனையாளர் திரு தமிழரசன் என்பவர் எ நாவல் டைம் அன்பளிப்பாக வெளியிட்டிருந்த செல்வி.ஜெயலலிதா அவர்களின் அஞ்சல் அட்டை அளவு போட்டோவை நமக்கு 13.2.91 தேதியில் அன்பளிப்பாகஅனுப்பியிருந்தார்கள். நமது கணிப்புக்கு சான்றாகவும், அங்கீகாரமாகவும் உள்ள அதனை இன்றளவும் பாதுகாப்பாக வைத்துள்ளோம்.நாம் எழுதிய அதே 1991-93 ம் வருட சனிப்பெயர்ச்சி புத்தகத்தில் 115 வது பக்கத்தில் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதல்வராவது குறித்து கீழ்கண்டவாறு எழுதியிருந்தோம்.

**“......... திரு.மு.க.ஸ்டாலின் முதல்வர் ஆகும் யோகம் இருக்கிறது. ஆனால் அதற்கு காலமிருக்கிறது. பிறந்த ஜாதகம் கிடைத்தால் மிகச்சரியாக கணிக்க முடியும். நமது ஆளும் கிரக கம்ப்யூட்டர் ஆய்வும் பொய்யாவதில்லை............”**

திரு.மு.க.ஸ்டாலின் 29.05.09 தேதியில் துணை முதல்வரானார் என்பது குறிப்பிடத்தக்கது.

2. நீலகிரி மாவட்டம் ஊட்டி சட்ட மன்ற தேர்தலில் ஜனவரி 1989 ம் வருடம் திராவிட முன்னேற்றக்கழகம் சார்பில் திரு.குண்டன் என்பவரும், காங்கிரஸ் சார்பில் திரு.எச்.எம்.ராஜு என்பவரும் போட்டியிட்டார்கள். திரு.குண்டன் அரசு போக்குவரத்துக் கழக மேலாளராக இருந்தவர். நல்லவர், வல்லவர்.

திரு.குண்டன் அரசு போக்குவரத்துக் கழக மேலாளராக இருந்த போது நிறைய கிராமங்களுக்கு பஸ் வசதி, குறிப்பாக பெரிய பஸ்கள் செல்ல முடியாத மலை வளைவுகளை கருத்தில் கொண்டு மினி பஸ்களை இயக்கினார். மக்களிடம் ஏற்கனவே நல்ல அறிமுகம் பெற்றவர்.

திரு.எச்.எம்.ராஜு அவர்கள் ஒரு வழக்கறிஞர். ஆனால் திரு.குண்டன் அவர்களுக்கு மக்களிடம் இருந்த அளவுக்கு இவருக்கு அறிமுகம் கிடையாது.

தேர்தல் முடிவுகள் பற்றிய கருத்துக் கணிப்பில் திரு.குண்டன் அவர்கள்தான் தேர்தலில் வெற்றிப்பெறுவார் என்று மக்கள் மத்தியில் ஒரு பரவலான கருத்து இருந்தது.

இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ் கூட திரு.குண்டன் அவர்களுக்குள்ள வெற்றி வாய்ப்பை குறிப்பிட்டிருந்தது. ஆனால் நாம் கம்ப்யூட்டரில் திரு.எச்.எம்.ராஜு அவர்கள்தான் தேர்தலில் வெற்றி பெறுவார்கள் என்று கணித்து திரு.ராஜு அவர்களுக்கு கடிதமும் அனுப்பி வைத்தோம்.

தேர்தல் முடிந்தது. வாக்கு எண்ணிக்கை நாள் மிகவும் த்ரில்லிங்காக இருந்தது. ஏனென்றால் ஒரு சுற்றில் திரு.குண்டன் அவர்கள் முன்னனிக்கு வருவதும், அடுத்த சுற்றில் திரு.எச்.எம்.ராஜு அவர்கள் முன்னனிக்கு வருவதுமாக இருந்தார்கள்.

சுருக்கமாகச்சொன்னால் ஒரு மணி நேரம் ஒருவரும் அடுத்த ஒரு மணி நேரம் இன்னொருவரும் முன்னனியில் இருந்தார்கள். இறுதியில் ஆயிரத்திற்கும் குறைவான ஒட்டுகள் வித்தியாசத்தில் **திரு.எச்.எம்.ராஜு அவர்கள் வெற்றி பெற்றார்கள்.**

1989ம் வருடம் செப்டம்பர் மாதம் ஊட்டியில் நாம் எழுதிய டாக்டர்.முத்துக்காளத்தி சிந்தனைகள் நூல் வெளியீட்டு விழா நடந்தது. இவ்விழாவில் **கலைஞர்.மு.கருணாநிதி** அவர்களின் நெருங்கிய நண்பரும், பிரபலமான பத்திரிக்கை ஆசிரியருமான பெரியவர் **சாவி** அவர்கள் எனது வேண்டுகோளுக்கிணங்க கலந்துக்கொண்டு

அவருக்கு சமர்ப்பணம் செய்திருந்த டாக்டர்.முத்துக்காளத்தி சிந்தனைகள் நூலின் முதல் பிரதியை இவ்விழாவின் சிறப்பு விருந்தினராகவும், இந்நூல் வெளியீட்டாளராகவும் கலந்துக்கொண்ட ஊட்டி சட்ட மன்ற உறுப்பினர் திரு.எச்.எம்.ராஜு அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டார்கள்.

முன்னாள் அ.தி.மு.க ஊட்டி சட்ட மன்ற உறுப்பினர் திரு.கோபால் அவர்களும், குமரி அனந்தன் கட்சியைச் சார்ந்திருந்த திருமதி.விமலா கணேசன் அவர்களும் கலந்துக்கொண்ட இவ்விழாவில் ஊட்டி சட்ட மன்ற உறுப்பினர் திரு.எச்.எம்.ராஜு அவர்கள் நமது ஜோதிட கணிப்பு பற்றியும் பேசினார்கள். திரு.எச்.எம்.ராஜு அவர்கள் பேசியதிலிருந்து ஒரு சிறிய பகுதி இங்கே -

“.......... நான் எம்.எல்.ஏ ஆக முடியும் என்று முதன் முதலாக கம்ப்யூட்டரில் கணித்து சொன்னார் இவர். அரசியல் முதல் என் சொந்த வாழ்க்கை வரை கம்ப்யூட்டர் வசந்த் கணிப்பது நடந்து வருகிறது ...........”

ஒலி நாடாவில் பதிவு செய்யப்பட்ட இவரது இந்தப் பேச்சு இப்போதும் நமது கம்ப்யூட்ட்ர் கணிப்புக்கு ஆதாரமாக உள்ளது.

3. திரு.முத்துக்காளத்தி என்பவர் தமிழ் நாடு அரசின் செய்தித்துறையில் அதிகாரியாக பணியாற்றி வந்தார். நாற்பதற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவர். இவரது இந்நூல்களைக் கருவாகக்கொண்டுதான் டாக்டர்.முத்துக்காளத்தி சிந்தனைகள் நூல் எழுதப்பட்டது. டாக்டர்.முத்துக்காளத்தி சிந்தனைகள் நூல் வெளியீட்டு விழாவில் திரு.முத்துக்காளத்தி அவர்களும் கலந்துக்கொண்டு சிறப்புரையாற்றினார்கள். விழாவில் “.......... நான் எம்.எல்.ஏ ஆக முடியும் என்று முதன் முதலாக கம்ப்யூட்டரில் கணித்து சொன்னார் இவர். அரசியல் முதல் என் சொந்த வாழ்க்கை வரை கம்ப்யூட்டர் வசந்த் கணிப்பது நடந்து வருகிறது ..........” என்று இவ்விழாவில் ஊட்டி சட்ட மன்ற உறுப்பினர் திரு.எச்.எம்.ராஜு அவர்கள் பேசியதைக்கேட்ட திரு.முத்துக்காளத்தி அவர்கள் தனது மகன் ரவி யை ஐ.ஏ.எஸ் ஆக்க விரும்புவதாகவும், அதற்கு வாய்ப்பு உள்ளதா என்றும் கேட்டார்கள். கம்ப்யூட்டரில் கணித்து அவரது மகன் உயர் போலீஸ் அதிகாரியாகவோ அல்லது ராணுவ அதிகாரியாகவோ வருவார் என்று 1989 ல் தெரிவித்தோம்.

திரு.முத்துக்காளத்தி அவர்கள் காலமாகிவிட்டார்கள். அவரது மகன் திரு.ரவி ஐ.பி.எஸ் தேர்வு பெற்றார். இன்று தமிழ் நாடு அரசு காவல் துறையில் உயர் அதிகாரியாக இருக்கிறார்.

4. மேட்டூரில் ஒரு வங்கியில் கிருஷ்மூர்த்தி என்பவர் மேலாளராக இருந்தார். மிகவும் பிஸியான வங்கிக்கு மாறுதல் வரும் என்றும், தொலைவும் கூட கம்ப்யூட்டரில் கணிக்கப்பட்டது. காஞ்சிபுரத்துக்கு மாறுதல் வந்தது. ஆனால் அப்போது அது மிகவும் பிஸியான வங்கி இல்லை. ஆனால் அவர் மேட்டூரிலிபுந்து ரிலீவ் ஆகுவதற்கு முதல் நாள் பாண்டிச்சேரிக்கு மாறுதல் உத்திரவு. பாண்டிச்சேரி மிக மிக பிஸியான வங்கி. நேரமே இல்லை கிருஷ்ண மூர்த்திக்கு.

5. சேலத்தில் பாபுஜி என்பவருக்கு உத்தியோக உயர்வுடன் 900 - 1200 கி.மீ க்குள் மாறுதல் வரும் என்று கம்ப்யூட்டரில் கணிக்கப்பட்டது. இவர் ஆந்திராவில் உள்ள ராஜமுந்திரிக்கு மாற்றப்பட்டார்.

-இப்படி நிறைய கணிப்புகள் கம்ப்யூட்ட உதவியுடன் கணிக்கப்பட்டுள்ளன.

ஜோதிடம் பொய் அல்ல; மூடநம்பிக்கையும் அல்ல.

ஜோதிட கணிப்புகளுக்காக தேவைப்படும் விவரங்களில் தவறு இருப்பினும் அல்லது போதுமான விவரங்கள் தரப்படாவிடினும் ஜோதிடத்தில் தவறு ஏற்படும்.

கணக்கு ஆசிரியரிடம் தவறு இருக்குமே தவிர கணக்குப்பாடத்தின் தவறாகாது. ஜாதகப் பொருத்தம் பார்த்து செய்யும் திருமணங்கள் தோல்வியில் முடிந்திருக்கின்றன என்பதை நாம் அனுபவத்தில் பார்க்கிறோம். ஜாதகப் பொருத்தம் பார்த்து செய்த திருமண தம்பதியினருக்கு குழந்தைகள் இல்லாமல் இருப்பதையும் பார்க்கிறோம். ஆனால் நாம் கம்ப்யூட்டரில் ஆய்வு செய்து கணித்துக் கொடுத்த குடும்பங்கள் வாரிசுகளைப் பெற்று வாழ்வில் தொழில்...உத்தியோகம் போன்றவற்றிலும் வெற்றி பெற்று சாதனையாளர்களாக மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வருகிறார்கள்.

திருமணம்...குழந்தை பிறப்பு...கல்வி...பணம்...தொழில்...உத்தியோகம் போன்றவை சம்மந்தப்பட்ட கிரகங்களுக்கும் மனித வாழ்வில் நடக்கும் நிகழ்வுகளுக்கும் உள்ள தொடர்பை பலரின் ஜாதகங்களின் அடிப்படையில் மீண்டும்,மீண்டும் கம்ப்யூட்டரில் ஆய்வு செய்து கண்டறியப்பட்டுள்ள விவரங்களின்படி காலத்திற்கு ஏற்ற ஜோதிட கணிப்பு முறைகளை பின்பற்றி வருகின்றோம்.

காலத்திற்கு ஏற்ற மாற்றங்கள் ஜோதிட கணிப்பு முறைகளிலும் பின்பற்ற வேண்டியது அவசியமாக இருக்கிறது.

இதற்கான அறிவை மேலும்,மேலும் ஜோதிட ஆராய்ச்சியில் தொடர்ந்து ஈடுபடுவதன் மூலமாகவே பெறமுடியும்.

ஏட்டு சுரைக்காய் கறிக்கு உதவாது என்பது முற்றிலும் உண்மை. செயல்முறை அனுபவம், ஆராய்ச்சி திறன் ஆகியவை மேம்பட்டால் மட்டுமே சரியான கணிப்புக்களை தர முடியும்.

தமிழ்நாடு சட்டசபைக்கான தேர்தல் ஏப்ரல் 13, 2011-ல் நடைபெற்றது. **உயர்திரு 420** படத்தின் தயாரிப்பாளர் திரு. சந்திரசேகரன் அவர்கள் கேட்டுக் கொண்டதன் பேரில் யார் வெற்றி பெற்று ஆட்சி அமைப்பார் என்று ஜோதிடம் கணிக்க கேட்டுக் கொள்ளப்பட்டது. ஏப்ரல் 14, 2011 தேதியில் ஜெயலலிதா ஆட்சி அமைப்பார் என்று கம்ப்யூட்டரில் கணித்து இவருக்கு அனுப்பி வைத்தோம். **செல்வி ஜெயலலிதா (16.5.2011) முதலமைச்சரானார்.**

முகவரி


**A. VASANTHA KUMAR, POST BOX NO.8, 438-B, SHIRDI SAI R.K.BUILDINGS, PENNAGARAM ROAD, DHARMAPURI.**

**MOBILE - 9443846074**